28th March 1969]

Smuggling of rice

* 264 *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether a lorry smuggling rice from Kancheepuram was apprehended in the first week of March 1968 ;

(*b*) if so, the number of rice bags seized ; and

(*c*) whether any prosecution was launched against those who were responsible for this smuggling ?

அரிசி கடத்தல்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில் :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968 மார்ச் முதல் வாரத்தில் காஞ்சிபுரத்திலிருந்து அரிசி கடத்தி வந்த லாரி ஒன்று பிடிபட்டதா ?

(இ) ஆமெனில், எத்தனை மூட்டை அரிசி பறிமுதல் செய்யப்பட்டது?

(உ) கள்ளக் கடத்தலுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) 5 மூட்டை அரிசி.

(உ) கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட எ.பி.சி. 2403 எண்ணுள்ள லாரியை கைப்பற்றும்பொழுது, லாரியில் திரு. சுப்பாரெட்டி, லாரி இயக்குநர், திரு. முகபூப்ஷா, குரோம்பேட்டை, திரு. கந்தசாமி ஆகியோர் இருந்தனர். அவர்கள் மீது செங்கற்பட்டு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கில் திரு. சுப்பாரெட்டி ரூ. 50 அபராதமும், கட்டத்தவறினால் இரண்டு வாரம் கடுங்காவல் தண்டனையும், திரு. மகபூப்கானுக்கு ரூ. 25 அபராதமும், கட்டத்தவறினால் ஒரு வாரம் கடுங்காவல் தண்டனையும், திரு. கந்தசாமிக்கு ரூ. 150 அபராதமும் கட்டத்தவறினால் 6 வாரம் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட அரிசியை விற்ற பணத்தையும் லாரியையும் அரசு பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

Fishing in Periyar Dam

* 265 *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that fishing was not allowed for the last 70 years in Periyar Dam;

(*b*) if so, whether fishing was allowed in 1968 ; and

(*c*) the value of the fish caught ?

பெரியாறு அணைக்கட்டில் மீன்பிடித்தல்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பெரியாறு அணைக்கட்டில் சென்ற 70 வருடங்களாக மீன் பிடிக்க அனுமதிக்கவில்லை என்பது உண்மையா ?

[28 th March 1969

(இ) ஆமெனில், 1968-ல் மீன் பிடிக்க அனுமதித்து உத்தரவிடப் பட்டதா ?

(உ) ஆமெனில் எவ்வளவு மதிப்பு மீன் கிடைத்தது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) (இ) & (உ) பெரியாறு ஏரியில் மீன்பிடி உரிமை, பீர்மேடு வேட்டையாளர்க் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 300 குத்தகைத்தொகையில் 1-12-1941 முதல் 10 ஆண்டுக்காலத்திற்கு கொடுக்கப்பட்டது. இந்தத் குத்தகைக் கால அளவு முடிவடைந்த பிறகு பொதுப்பணித்துறையினர், இந்த ஏரியில் மீன் பிடி உரிமையைத் தனிப்பட்டவர்களுக்கு அளித்து வந்தனர். இந்த ஏரியில் மீன் பிடிப் பதைத் துறையினரே மேற்கொள்ள வேண்டும் என்றும் இனிமேல் இதற்கான உரிமையைத் தனிப்பட்டவர்களுக்கோ நிறுவனங்களுக்கோ அளிக்கக்கூடாது என்றும் 1968 பிப்ரவரி திங்களில் அரசு முடிவு செய்தது. இதன்படி, பெரியாறு ஏரியில் உள்ள மீனளத்தைப் பயன் படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, மீனளத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். நீரியல் பிரிவினர் இரண்டு நாட்களுக்கு மீன் பிடி பணியை மேற்கொண்டனர் என்று மீனளத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார். இந்த ஏரியில் இரண்டு நாட்களில் 10 ரூபாய் மதிப்புள்ள 20 கிலோவுக்குக் குறைவான பொம்மீன் (Barbastor) திலாப்பியா போன்ற மீன்கள் கிடைத்தன. இந்த ஏரியில் உள்ள மீனளத்தைப் பயன்படுத்துவதற்காகப் பெருந்தொகையை முதலீடுசெய்வதற்கு முன்பு இந்த ஏரியில் தனிப்பட்டவர்கள் அனுமதி யின்றி மீன் பிடிப்பதைத் தடை செய்யவேண்டுமென்று மீனளத்துறை இயக்குநர் கருத்தறிவித்துள்ளார். கேரள மாநில எல்லைப் பகுதியில் உள்ள இந்தப் பெரியாறு ஏரியில் திருட்டுத்தனமாக மீன் பிடிப்பதையோ அனுமதியின்றி மீன்பிடிப்பதையோ தடுப்பதில் சட்டப்படிக்கான இடர்பாடு கள் உள்ளன. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Storage of Paddy

* 266 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the authorities who are responsible for storing the procured paddy from Thanjavur in the silos at Tiruvaiyaru ;

(*b*) the authorities who are responsible for the damage and reduction in quantity of paddy in that place ; and

(*c*) the quantity of paddy which has been lost in storage so far ?

நெல் இருப்பு.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யும் நெல் திருவை யாறு சைலோவில் இருப்பு செய்வது யார் பொறுப்பு ?

(இ) அங்கு கெட்டுப் போகும் நெல்லுக்கும் குறை ஏற்படுதலுக்கும் யார் பொறுப்பு ?

(உ) இதுவரை எவ்வளவு அளவு நெல் குறைந்தது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ), (இ) திருவையாற்றில் சைலோக்கள் இல்லை. இருப்பினும், கொள்முதல் செய்யப்பட்ட நெல், திருவாரூரில் உள்ள நவீன அரைவு ஆலையில், தஞ்சாவூர் கோ-ஆப்ப ரேட்டிவ் மார்க்கெட்டிங் பெடரேஷனால் இருப்பு செய்யப்படுகிறது. ஆகவே அங்கு சேதமாகிக் குறைந்த நெல்லுக்கு அவர்களே பொறுப் பாளர்கள்.